வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No.: P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu    ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    15.01.2025 புதன்கிழமை    இதழ் : 15    பக்கங்கள் : 12

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை; தமிழக முதல்வருடன் பேச தீர்மானம்

கிளிநொச்சி, ஜன. 15

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தொடர்பில், தமிழக முதலமைச்சருடன் பேச்சு நடத்த, சந்தர்ப்பம் கோரியுள்ளதாகவும், வெகுவிரைவில் பேச்சு நடத்த எதிர்பார்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் விழா நேற்று கிளிநொச்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிவஞானம் சிறீதரன், அரிசியிட்டு பொங்கலை ஆரம்பித்து வைத்தார்.

இதன் பின்னர் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் பங்கேற்றனர். (அ)

## அரசியல் கைதிகளென எவரும் தடுத்து வைக்கப்படவேயில்லை

### நீதி அமைச்சர் ஹர்ஷண அறிவிப்பு



கொழும்பு, ஜன. 15

நாடளாவிய சிறைகளில் அரசியல் கைதிகளென யாரும் தடுத்து வைக்கப் படவில்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து

11



## சஜித் பங்கேற்ற பொங்கல்!

கொழும்பு, ஜன. 15

தமிழ் மக்கள் மிகுந்த பக்தியுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடும் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று பொங்கல் தினக் கொண்டாட்ட நிகழ்வு கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் வஜிரா பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய மக்கள்

11

## வன்னியில் 50 சதவீதமானோருக்கு மின்னஞ்சல் பயன்படுத்த தெரியாது

### ஆய்வொன்றில் வெளிவந்தது தகவல்

கொழும்பு, ஜனவரி 15

**வடக்கு மாகாணத்தின் வன்னிப் பிராந்தியத்தில் 12-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட டிஜிற்றல் அறிவு பற்றிய ஓர் ஆய்வில் ஏறத்தாழ 50 சதவீதமானவர்கள் மின்னஞ்சலை பயன்படுத்துவதில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.**

அதேவேளை, 17 வீதமானோர் மட்டுமே இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக வேலை வாய்ப்பை பெறுகின்றனர் என்றும் 30 வீதமானோர் மட்டுமே இணையதளங்கள் ஊடாக அரசாங்க சேவைகளை பெற்றுக்கொள்கின்றனர் என்றும் 30 சதவீதமானோர் சமூக வலைத்தளங்களை அறவே பாவிப்பதில்லை என்றும் இந்த ஆய்வில் அறியப்பட்டுள்ளது.

வன்னி பிராந்தியத்தின் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 1347 குடும்பங்களைச் சேர்ந்த 12-40 வயதுக்கு இடைப்பட்ட 2975 பேரிடம் இந்த ஆய்வை பிரித்தானியாவின் கேட் நிறுவனம் மற்றும் வவுனியா பல்கலைக் கழகம் ஆகியவை கூட்டாக

11

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவராக செல்வம் அடைக்கலநாதன்!



- குமார கோகுலன் -

வவுனியா, ஜன. 15

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதனை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கூட்டணியின் பங்காளி கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, ரெலோ, புளாட்,

11



## சீனா சென்ற ஜனாதிபதி அநுரவுக்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பு

பீஜிங், ஜன. 15

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று காலை 10:25 மணிக்கு பீஜிங் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க சீனாவுக்கு நான்கு நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், சீனா சென்ற ஜனாதிபதிக்கு, சீன இராணுவத்தால் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டதுடன், சீனாவின் துணை வெளியுறவு அமைச்சர் சென் சியாடோங் முறையாக வரவேற்றுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின்

11

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழு 18ஆம் திகதி திருமலையில் கூடும்

- குமார கோகுலன் -

யாழ்ப்பாணம், ஜன. 15

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், எதிர்வரும் 18ஆம் திகதி பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

திருகோணமலையில் உள்ள சிவில் அமைப் பொன்றின் கேட்போர் கூடத்தில், காலை 10.00 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது, கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள

11

## அரசு பாதை தவறினால் பிரதிபலன் கடினமாகும்!

### ரவி கருணாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

அரசாங்கம் சரியான பாதையில் பயணிக்காவிடின் அதன் பிரதிபலன் கடினமாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மயூராபதி கோவில் பொங்கல் கொண்டாட்டத்தில் கலந்து

11

## 13இல் கைவைக்கமாட்டோம்!

### சென்னையில் சொன்னார் அமைச்சர் சந்திரசேகர்

சென்னை, ஜன.15

13ஆவது திருத்தச்சட்டத்தினை தமிழ் மக்கள் தமக்கு கிடைத்த உரிமையாக கருதுகின்ற நிலையில் அதில் கைவைப்பதற்கு நாங்கள் முனைய வில்லை என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம்

11

## சீன ஜனாதிபதியை இன்று சந்திக்கின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்கை சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீனாவுக்கு 4 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று பிற்பகல் சீன ஜனாதிபதி ஷீ ஜின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை அமுல்படுத்தினால் அரசு இலக்கை அடையலாம்!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதியின் கிளீன் சிறி லங்கா செயற்திட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். ஒரு வாரத்துக்கு மாத்திரம் வீதியைத் துப்புரவு செய்வதால் நாட்டை தூய்மைப்படுத்த முடியாது. சட்டத்தை முறையாக அமுல்படுத்தினால் இலக்கை அடைய முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கிளீன் சிறி லங்கா செயற்திட்டம் சிறந்தது. அரசியல் நோக்கத்துக்கு இந்த திட்டத்தைச் செயற்படுத்தக் கூடாது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் மக்கள் மத்தியிலிருந்து புதிய மாற்றங்கள் தோற்றம் பெறவேண்டும். சிங்கப்பூர் நாட்டில் கிளீன் செயற்திட்டம் ஆரம்பமான போது அரசாங்கத்துக்கு அந்நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள் - என்றார். (அ)



# பிரதமர் அலுவலகத்தில் நேற்று பொங்கல் விழா

கொழும்பு, ஜன. 15

உழவர் திருநாளான பாரம்பரிய தைப் பொங்கல் பண்டிகைக்கான சடங்குகள், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நேற்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றன.

பொங்கல் பொங்குதல் உள்ளிட்ட பாரம்பரிய சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த விழா கொண்டாடப்பட்டது.

இங்கு பிரதமர் அலுவலக அதிகாரிகளால் பல நடன மற்றும் பாடல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மீன்வளத் துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் பிரதமர் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

# கறுப்புப் பட்டியலில் உள்ள நிறுவனத்துடன் மருந்துக் கொள்வனவு ஒப்பந்தம் கிடையாது!

கொழும்பு, ஜன. 15

வாய் சுத்தப்படுத்தும் ஒரு வகையான மருந்தை விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம், கறுப்புப் பட்டியலில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பதிவுச் சான்றிதழுடன் குறைந்த விலைப்பட்டியலைச் சமர்ப்பித்த நிறுவனத்துக்குக் குறித்த கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டதாக அந்த கூட்டுத்தாபனம் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளது.

குறித்த ஏலத்துக்காக, விலைப்பட்டியலைச் சமர்ப்பித்த அனைவரும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கொள்முதல் குழு அந்த கேள்விப்பத்திரத்தை வழங்குவதற்குத் தீர்மானித்திருந்தபோதிலும் அதன் பின்னரான பின்தொடர்தல் செயல்முறையின் போது, குறித்த விநியோகஸ்தர் பணம் செலுத்துவதற்குத் தவறியிருந்தமை தொடர்பில் பணிப்பாளர்கள் குழாமினால் அடையாளம் காணப்பட்டிருந்தது.

அதன்படி, குறித்த கேள்விப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், விலைப் பட்டியலைச் சமர்ப்பித்துள்ள ஏனைய விநியோகஸ்த்தர்களில் தகுதியான ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொங்கலுக்கும் அரிசியை வழங்க முடியாத அநுர அரசு

## சாடுகிறார் சமிந்த விஜேசிறி

கொழும்பு, ஜன. 15

பொங்கலுக்கேனும் அரிசியை வழங்க முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக தெரியவில்லை. ஆகவே அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

தேர்தல் மேடைகளில் கல்வித்துறை சார் விடயங்களுக்கு விதிக்கப்படும் வரிகளை முழுமையாக நீக்குவதாக ஜனாதிபதி கூறினார். ஊடகங்களில் ஒத்துழைப்புடன் ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் தற்போதே ஊடகங்களை முடக்க எத்தனிக்கின்றது.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றாமையை வெளிப்படுத்தும் ஊடகங்களை அரசாங்கம் அடக்குமுறைக்கு உட்படுத்த எத்தனிக்கின்றது. ஜனநாயக நாட்டினுள் ஊடக அடக்குமுறை இடம்பெறுமாயின் அதற்கு எதிராக குரல் கொடுக்க நாம் தயாராகவுள்ளோம்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தருணத்தில் சீனத்திட்டங்களை விமர்சித்த அநுரகுமார திஸாநாயக்க தற்போது சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ஆடை அணிந்து கொண்டா ஜனாதிபதி சீனாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்-என்றார். (அ)

# வரி செலுத்தாது மஞ்சள் பொதிகள் கடத்த முற்பட்ட இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜன. 15

வரி செலுத்தாது மஞ்சள் பொதிகளை கடல் மார்க்கமாக கடத்த முற்பட்ட சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என துன்கல்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் மஞ்சள் அடங்கிய 101 உரப்பைகளை லொறியொன்றில் ஏற்றி கடத்த முற்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் 44 மற்றும் 47 வயதுடைய வர்கள் என தெரிய வந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 3947 கிலோகிராம் 900 கிராம் மஞ்சள் உர பைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# தொழிற்சங்க பிரதிநிதிகளை சந்தித்த சுகாதார அமைச்சர்



கொழும்பு, ஜன. 15

நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் புதிய வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பை நல்குமாறு சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுகாதார சேவையில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களுடனும் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தான சுகாதார அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் அகில இலங்கை சுகாதார முகாமைத்துவ அதிகாரிகள் சங்கம், அகில இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் மற்றும் இலங்கை உணவு மற்றும் மருத்துவ பரிசோதகர்கள் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சுகாதார நிபுணர்களின் தற்போதைய தொழில்சார் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது மாத்திரமன்றி சுகாதார அமைச்சுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான நல்லிணக்கம் மற்றும் நட்புறவை வளப்பதே கலந்துரையாடலின் நோக்கம் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் புதிய வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பை நல்குமாறு அமைச்சர் தொழிற்சங்கங்களிடம் தெரிவித்தார். (அ)

# மின் கட்டணத்தைக் குறைக்க இப்போது சாத்தியமான சூழல்

## இந்திக அனுருத்த சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 15

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மின் கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைக்க முடியும் என்று குறிப்பிட்ட அரசாங்கம் தற்போது 3 வருடங்களுக்கு மின் கட்டணத்தை குறைப்பது சாத்தியமற்றது என்று குறிப்பிடுவது முறையற்றது. 2022 ஆம் ஆண்டு மின் கட்டணத்தை திருத்தம் செய்யாமலிருந்திருந்தால் இன்றும் மின்விநியோக துண்டிப்பு தொடர்ந்திருக்கும் என முன்னாள் மின்சாரத்துறை இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

மின்கட்டண திருத்தம் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின் கட்டணத்தை குறைப்பதாக வாக்குறுதியளிக்கவில்லை. எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு மின் கட்டண திருத்தம் சாத்தியமற்றது என்று சக்திவலு அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்தை கடுமையாக விமர்சித்த ஜனாதிபதி அநுரகுமார தற்போது நாணய நிதியத்தை தவிர்த்து மாற்று வழியில்லை என்று குறிப்பிடுகிறார். ஆகவே மின் கட்டணம் தொடர்பில் மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிடுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மின் கட்டணத்தை 35 சதவீதத்தால் குறைப்பதாக ஜனாதிபதி அநுரகுமார மக்களுக்கு வாக்குறுதியளித்தார்.

இதனால் தான் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு முழுமையாக ஆதரவளித்தார்கள். தற்போது மின் கட்டண குறைப்பு இல்லை என்று குறிப்பிடுவது முறையற்றது.

மின்விநியோக துண்டிப்பு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

மக்கள் போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி வன்முறைப் போராட்டமாக மாற்றியமைத்து அரசியல் இலாபம் தேடிக் கொண்டது.

2022 ஆம் ஆண்டு மின் கட்டணத்தை திருத்தம் செய்யாமலிருந்திருந்தால் இன்றும் மின்விநியோக துண்டிப்பு தொடர்ந்திருக்கும்.

மின் விநியோக கட்டமைப்பு சீர் செய்ததன் பின்னர் கடந்த ஆண்டு 21 வீதமளவில் மின் கட்டணத்தை குறைத்தோம். நீர் மின்னுற்பத்தியை அதிகரித்து அதன் உச்ச பயனை மக்களுக்கு வழங்கினோம்.

மின் கட்டணத்தை குறைப்பதற்கு சாத்தியமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததன் பின்னரே அரசாங்கத்தை ஒப்படைத்தோம். எரிபொருள் இறக்குமதியின்போது 50 ரூபாய் மேலதிக வரி அறவிடப்படுகிறது.

அந்த வரியை அப்போதைய மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பெற்றுக் கொண்டார் என்று தேசிய மக்கள் சக்தியினர் குற்றஞ்சாட்டினார்கள்.தற்போது அரசாங்கம் மாற்றமடைந்துள்ளது.

காஞ்சன விஜேசேகர அமைச்சரல்லர், ஆகவே அந்த 50 ரூபாய் வரியை நீக்கி அதன் பயனை அரசாங்கம் மக்களுக்கு வழங்கலாம். ஏன் மின்கட்டணத்தை குறைக்க முடியாது என்று மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
15.01.2025 புதன்கிழமை
பிலவ வருடம், தை 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஊழலுக்கு எதிரான அநுரவின் நடவடிக்கை

சீன நிறுவனங்களிடமிருந்து பணம் பெற்றவர்களை வெளிப்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், ஜனாதிபதி அநுர குமாரவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். சீனாவுக்குச் சென்றிருக்கும் அநுரகுமார செங்கம்பள வரவேற்புடன் மகிழ்ச்சியான சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகின்றார்.

இந்த நிலையில் அவரிடம் இவ்வாறு எல்லாம் எதிர்பார்ப்பது சற்று அதிகம்தான் தவிர. மனோ கணேசன் கடந்த காலத்தில் ஆதரித்தவர்கள் எல்லாம் அவ்வாறு நேர்மையாக நடந்துகொண்ட வரலாறும் இல்லை. ஆனால் அநுரகுமார ஊழலை இல்லாதொழிப்பார் என்னும் நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றது. அந்த அடிப்படையில்தான் மக்கள் அவருக்கு வாக்களித்திருந்தனர். ஆனால் அனுரகுமார தேர்தல் காலத்தில் கூறியது போன்று அப்படியொன்றும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

அநுரகுமார திஸநாயக்க அதிகாரத்திற்கு வந்தால் முக்கியமாக ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சியின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வார் என்னும் எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ராஜபக்ஷக்களின் விடயங்களை கையாள்வதில் அதிக தயக்கம் காட்டுவது போன்றே தெரிகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஊழலுக்கு எதிரான விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்தவொரு விடயத்தையும் அநுர அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. ஆகக் குறைந்தது மதுபான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளின் பெயர் விபரங்களை வெளியிடப் போவதாக அநுரகுமார திஸநாயக்க பொது மக்களுக்கு கூறியிருந்தார் ஆனால் இன்றுவரையில் அது நடைபெறவில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது, ஜனாதிபதி தேர்தலில் ஆதரவை பெறும் நோக்கில் மதுபான அனுமதிப்பத்திரங்களை தமிழ் அரசியல்வாதிகளுக்கு வழங்கியதாக பரவலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கை தமிழ் அரசு கட்சியின் நாடளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் இது தொடர்பில் பொது வெளிகளில் பேசியிருந்தார். ஆனால், இன்று வரையில் அவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஒரு வேளை சுமந்திரன் பொய் கூறினாரோ - என்று கூட, ஒருவர் கேள்வியெழுப்பக் கூடும் - ஏனெனில் இன்றுவரையில் அந்த விடயத்தின் உண்மைத்தன்மையை பொது மக்கள் அறிந்து கொள்ள முடியவில்லை. தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மதுபானசாலை விவகாரம் தொடர்பில் சுமந்திரனும் அமைதியாகவே இருக்கின்றார்?

வடக்கு, கிழக்கில் பல இடங்களில் புதிய மதுபான சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் தொடக்கம் திருகோணமலை வரையில் எங்கெல்லாம் புதிய மதுபான சாலைகள் திறக்கப்பட்டுள்ளன என்னும் விபரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால் அனுமதிப்பத்திரங்களை சிபார்சு செய்த அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடுவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏன் பதுங்குகின்றது?

இவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பெற்று, தனியாருக்கு விற்பனை செய்து பல கோடிகளை பெற்றுக்கொண்ட குறிப்பிட்ட அந்த மோசமான தமிழ் அரசியல்வாதிகள் யார்? வாக்களித்த மக்களுக்கு அதனை அறியும் உரிமையுண்டு. ஆனால், அதற்கான வாய்ப்பை அநுரகுமார திஸநாயக்க இன்றுவரையில் வழங்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அநுரவின் வாக்குறுதி முதல் விடயத்திலேயே பிழைத்துவிட்டது என்றுதானே கூறவேண்டியிருக்கின்றது. இந்த விடயத்திலேயே உண்மையை மக்கள் அறிய முடியாத போது, ராஜபக்ஷக்களின் விடயத்தில் - அதே போன்று கடந்தகாலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல மோசடிகள் தொடர்பில் அநுர அரசாங்கம் எவ்வாறு உண்மைகளை வெளிப்படுத்தப் போகின்றது?

# அமெரிக்கா எம்மை அழைத்தால் பிரச்னைகளை எடுத்துக்கூறுவோம்

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் உறுதி



வவுனியா, ஜன.15

அமெரிக்க அரசாங்கம் எங்களை அழைத்தால், வாஷிங்டனுக்குச் சென்று, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவைகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தைப்பொங்கல் தினமான நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு குறிப்பிட்டனர்.

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தின் பின் தொடரந்தும் கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்,

இன்று(நேற்று) நாங்கள் நம்பிக்கையை கொண்டாடுகிறோம், ட்ரம்பை வாழ்த்துகிறோம், நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களை பெருக்குகிறோம்

இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லையும் குறிக்கிறது. தமிழ்த் தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் மீண்டும் வரும்வரை முன்னெடுத்து வரும் இடைவிடாத போராட்டத்தின் 2886 ஆம் நாளாகும். வவுனியா நீதிமன்றத்துக்கு முன்பாக ஏ - 9 வீதியில் நிற்கும் இந்த தைரியமான தாய்மார்கள் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக்கையை தொடர்ந்தும் முன்வைக்கின்றனர். தங்களின் அன்புக்குரியவர்களை வெளிக்கொணர்வதும், எதிர்கால இனப்படுகொலைகளைத் தடுப்பதும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதும் இந்தத் தாய்மார்களின் நோக்கம் - என்றார்.

(எ-10)

## நாளொன்றுக்கு 2,500 கடவுசீட்டுக்கள்!

கொழும்பு, ஜன. 15

நாளொன்றுக்கு 2,500 வெளிநாட்டு கடவுசீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஒரு நாளைக்கு வழங்கப்பட்ட கடவுசீட்டுக்களின் எண்ணிக்கை 1,200 ஆக இருந்ததாகவும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

அவசரமாக வெளிநாடு செல்லவேண்டியிருந்தால், கடவுச்சீட்டுகளைப் பெறுவதற்கு தனி பீடம் திறக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் அன்னதா விஜேபால தெரிவித்தார்.

அந்த பீடம் ஊடாக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக கடவுசீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

## வல்லிபுர ஆழ்வார் கோவிலில் தைப்பொங்கல் விசேட பூஜை




வடமராட்சி, ஜன.15

புகழ்பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலில் தைப்பொங்கல் தினமான நேற்று விசேட பூஜைகள் இடம்பெற்றன. பிரதம குரு பிரம்மசிறீ சுதர்சன கணபதீஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 08.00 மணியளவில் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

காலை 06: 30 மணிக்கு வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்றதை தொடரந்து வல்லிபுரம் சக்கர ஆழ்வார் உள்வீதி வலம் வந்து 08.00 மணியளவில் பொங்கல் இடம்பெற்றது. இதில் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் கலந்துகொண்டனர்.(எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வாகன வசதிப் பெருகும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**இடபம்**

பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வாகனத்தை சீர் செய்வீர்கள். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள்.

**கன்னி**

உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**துலாம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வெற்றி கிட்டும் நாள்.

**விருச்சிகம்**

உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உதவி செய்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**

உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**மகரம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். வேலைகள் முடியும் நாள்.

**கும்பம்**

நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். கடன் வாங்காதீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**மீனம்**

குடும்பத்தில் உங்களின் நேரத்தை செலவழிப்பார்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அன்புத் தொல்லை குறையும்.

# யாழில் 4000 லீற்றர் கசிப்புடன் பொலிஸாரால் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.15

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை கிழக்கு சிவன்கோவிலடி பகுதியில் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் போன்றவற்றுடன் 30 வயது சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாக சகிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 11 ஆயிரம் லீற்றர் கோடா, 4 ஆயிரம் லீற்றர்



கசிப்பு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருட்கள் என்பன சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# மதுபான விற்பனையில் ஈடுபட்டவர் கைது


யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு பகுதியில் போயா தினத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மதுபான போத்தல்களில் 15 முழு போத்தல்களும், 165 கால் போத்தல்களும், 72 பியர் போத்தல்களும் இதன்போது கைப்பற்றப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக யாழ். மாவட்ட போதை ஒழிப்பு பிரிவுடன் இணைந்து நடத்திய சோதனையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.மேலதிக விசாரணை யின் பின்னர் சந்தேக நபரை யாழ்ப் பாணம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கை எடுத்துள்ளனர். (எ)

# வவுனியாவில் பொங்கலை முன்னிட்டு இந்து ஆலயங்களில் விசேட வழிபாடு



வவுனியா,ஜன.15

உழவர் திருநாளான தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று நடைபெற்றன.

வவுனியா கந்தசாமி கோவிலில் புதுப்பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் இடம்பெற்றதுடன், ஆலய பிரதம குரு தலைமையில் விசேட பூஜையும் இடம்பெற்றது. (எ)

# தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு அரச அதிகாரிகள் அசமந்தப்போக்கு

கிளிநொச்சி, ஜன.15

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் பலவருட காலமாக தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படாத பகுதியாக இருந்த போதிலும் இந்தப் பகுதி ஊடாகவே தொடர்ச்சியாக இரவு பகலாக சட்டவிரோதமான முறையில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு மணல் அகழ்வு நடைபெற்று வருகிறது.



இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அசமந்தப் போக்குடனே காணப்படுவதாக மக்கள் தொடர்ச்சியாக விசனம் வெளியிட்டு வருகின்றனர்.

புதிய அரசாங்கத்தின் செயல்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர் .

மேலும், இவ்வீதி ஊடாக சட்டவிரோ தமான முறையில் மணல் கொண்டு செல்வதனால் இவ் வீதியால் பயணிக்க முடியாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் மற்றும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை பட்டினியில் இருக்கவைத்து நாட்டைத் தூய்மைப்படுத்த முடியாது!

## சுட்டிக்காட்டுகிறார் எஸ்.எம்.சந்திரசேன

கொழும்பு, ஜன. 15

**நாட்டு மக்களை பட்டினியில் வைத்துக்கொண்டு நாட்டை துய்மைப்படுத்த முடியாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 கிலோ கிராம் பச்சை அரிசியை நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கியதால் தான் பச்சையரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் குறிப்பிடுவது சிறுபிள்ளைத்தனமானது என சர்வஜன சக்தியின் உப தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**



அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாய்ச்சொல் வீரரே தவிர, செயல் வீரரல்ல என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம். நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்துள்ளது.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் முறையான தீர்வினை பெற்றுக் கொடுக்கவில்லை. அரிசி தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளன. 1 இலட்சத்துக்கு 45 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான அரிசி தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சந்தையில் அரிசி தட்டுப்பாடு தொடர்கிறது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் எழுந்த பிரச்சினைக்கு அரசாங்கம் முறையான தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை. இதனால் தான் சில்லறை அரிசி வர்த்தகர்கள் அரிசியை கொள்வனவு செய்ய முன்வருவதில்லை. அரிசிக்கு தட்டுப்பாடு காணப்படுவதால் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறது.

விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இம்முறை பொங்கல் பொங்குவதற்கும் பச்சையரிசி இல்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 கிலோ கிராம் அரிசியை நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கியதால் தான் பச்சையரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் சிறுபிள்ளைத் தனமாக குறிப்பிடுகிறது. 20 கிலோ கிராம் அரிசி இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டதே தவிர பிற நாட்டு மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை அரசாங்கம் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களை பட்டினியில் வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாது. இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முறையான திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும். கோட்டாபய சேதன பசளைத் திட்டத்தை அமுல்படுத்தியதை போன்று கிளீன் சிறிலங்கா செயற்திட்டத்தை அமுல்படுத்தக் கூடாது - என்றார். (அ)

# வாகனம் இறக்குமதி செய்தால் மீண்டும் வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறை!

## கூறுகிறார் வசந்த அத்துக்கோரள

கொழும்பு, ஜன. 15

வங்கி கடனுக்கான வட்டி வீதம் குறைவாக காணப்படுகின்ற நிலையில் முறையான திட்டமிடல் இன்றி, தூரநோக்கற்ற வகையில் வாகனங்களை இறக்குமதி செய்தால் மீண்டும் வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை ஏற்படும். அது பொருளாதாரத்துக்கு சாதகமாக அமையாது என வாகன இறக்குமதி தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொருளாதார துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய வரித் திருத்தத்துக்கு அமைய வாகனத்தின் கொள்வனவு விலை உயர்வடையுமா என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் காணப்படுகிறது.

பாரியதொரு மாற்றம் ஏற்படும் என்று குறிப்பிட முடியாது. ஏனெனில் வாகன இறக்குமதியின் போது கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட வரி கொள்கைக்கு அமைவாகவே வரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையின் சந்தையில் தனித்த விலை காணப்படுகிறது.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதி செலவு 20 பில்லியனை காட்டிலும் அதிகளவில் காணப்பட்டது.

வட்டி வீதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அதற்கு பிரதான காரணியாகும். நாட்டில் மீண்டும் அவ்வாறான நிலை தோற்றம் பெற்றுள்ளது. வட்டி வீதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகிறது.

நாட்டின் தேவையைக் கருத்திற் கொள்ளாமல் வாகன இறக்குமதிக்கு அனைவருக்கும் வாய்ப்பளித்தால் பெருமளவானோர் கடன் பெற்று வாகனங்களை இறக்குமதி செய்ய முற்படுவார்கள். அதனால் வெளிநாட்டு கையிருப்பு நாட்டை விட்டு வெளியேறும். இறக்குமதி செலவு உயர்வடையும். இவ்வாறான செயற்பாடுகள் பொருளாதாரத்துக்குச் சாதகமானதாக அமையாது.

இறக்குமதி செலவுகளை இயலுமான அளவில் குறைத்துக் கொண்டு ஏற்றுமதிகளை அதிகரித்துக் கொண்டு பண்டகணக்குகளின் துறைகளை நிலையான தன்மையில் பேண வேண்டும். வாகன இறக்குமதி செலவு உயர்வடைந்தால் மத்திய வங்கியின் வெளிநாட்டு கையிருப்பில் பற்றாக்குறை ஏற்படும் - என்றார். (அ)

# வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் பிரமுகர்களிடம் அநுர அரசை விசாரித்தார் தமிழக முதலமைச்சர்

சென்னை, ஜன. 15

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் பிரமுகர்களிடத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விசாரித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அயகத் தமிழர் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வின்போது இலங்கை தமிழ் அரசியல் பிரமுகர்களுடன் தமிழக முதலமைச்சர் பேசினார்.

இதனையடுத்து, இலங்கையின் புதிய அரசாங்கம் எப்படிச் செயற்படுகின்றது, புதிய ஜனாதிபதி அநுரகுமார எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் என்று அவர்களிடத்தில் வினவியுள்ளார்.

இதன்போது பதிலளித்த சுமந்திரன், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இப்போது தான் மூன்றுமாதங்களாகின்றன.

பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளார்கள். ஆகவே அவர்களின் அடுத்த கட்ட நகர்வுகளை அவதானிப்பதற்கு மேலும் சில காலம் அவகாசம் தேவையாக உள்ளது-என்றார்.

அப்பதிலுடன், நாங்களும் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்தினை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து விட்டு அவ்விடத்திலிருந்து நகர்ந்து சென்றுள்ளார். (அ)

# இம்மாத ஆரம்பத்தில் நாட்டுக்கு வந்த அதிகளவான சுற்றுலாப் பயணிகள்!

கொழும்பு, ஜன. 15

இந்த மாதத்தின் முதல் 10 நாட்களில் சுமார் 80,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்தியா மற்றும் ரஷ்யாவிலிருந்தே அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய, இந்தியாவிலிருந்து 11,749 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 11,629 சுற்றுலாப் பயணிகளும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இதுதவிர, பிரித்தானியா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்துள்ளார். (அ)

# 7,000 இற்கும் மேற்பட்டோர் கடந்த ஆண்டு கண் தானம்!

கொழும்பு, ஜன. 15

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் மாத்திரம் 7,144 பேர் கண்தானம் செய்துள்ளதாக இலங்கை கண் தான சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் கடந்த ஆண்டில், பார்வைக் குறைபாடுள்ள 3,163 வெளிநாட்டவர்களுக்கும் 1,475 உள்நாட்டவர்களுக்கும் தங்களால் கண்களை தானம் செய்ய முடிந்ததாக அந்த சங்கத்தின் தலைவர் சம்பத் டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப் பகுதியில் 22 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது இறப்பிற்குப் பின்னர் கண்களை தானம் செய்வதற்குப் பதிவு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தம் குறித்து கலந்துரையாட எம்மையும் அழையுங்கள்

## தயாசிறி அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 15

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டமூலத்தில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கின்றன. அது தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாட எதிர்பார்க்கிறோம் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டமூலம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிமன்ற தேர்தல் தொடர்பான சட்டமூலம் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த தேர்தலை நடத்துவதற்கு முன்னர் தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பல திருத்தங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாக காணப்படுகிறது. இந்த எண்ணிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

அதனால் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8ஆயிரத்தில் இருந்து 5ஆயிரமாக குறைக்கப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைக்க இருக்கிறோம். ஏனெனில் இந்த 8ஆயிரம் உறுப்பினர்களை பராமரிப்பதற்கு பாரிய நிதி செலவிடப்பட வேண்டி இருக்கிறது. இது போன்று உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் என இன்னும் 10 இற்கும் அதிகமான யோசனைகள் எம்மிடம் இருக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் இந்த தேர்தல் முறைமை தொடர்பான திருத்தங்களை இன்னும் சில தினங்களில் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கிறது. தற்போதுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறை அவசரத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைமையாகும்.

அதனால் இந்த தேர்தல் முறைமையில் பல தருத்தங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. அதனால் அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொள்ள திட்டம் ஒன்றை அமைத்து, அது தொடர்பில் கலந்துரையாட எங்களுக்கும் அழைப்பு விடுக்கவேண்டும் என அரசாங்கத்திடம் கேட்கிறோம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 340 உள்ளூராட்சி மன்றங்களிலும் சுதந்திரக் கட்சி கூட்டணி போட்டி!

## கதிரைச் சின்னத்தில் களமிறங்க தீர்மானம்

கொழும்பு, ஜன. 15

**ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கூட்டணி வடக்கு, கிழக்கு உள்ளிட்ட 340 உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிட தீர்மானித்துள்ளது.**

இதன்படி கதிரைச் சின்னத்தில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

வேட்பாளர் பட்டியலை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஏனைய கட்சிகளின் விபரங்கள் கிடைத்தவுடன் இறுதிப் பட்டியலைத் தயாரிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இறுதி வேட்புமனு தயாரிப்பின்போது கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் கருத்தில் கொள்ளப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான லசந்த அழகியவண்ண குறிப்பிட்டார். (அ)

# துப்பாக்கி முனையில் யுவதியை கடத்திச் சென்ற இருவர் கைது!

கொழும்பு, ஜன. 15

கேகாலை, தெரணியகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியை காண்பித்து மிரட்டி யுவதியை கடத்திச் சென்றதாக கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் கைது தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கேகாலை, தெஹியோவிட்ட மற்றும் கதன்கம ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 17 மற்றும் 19 வயதுடையவர்கள் ஆவர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவருடன் நீண்ட காலமாக காதல் உறவில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதனை அறிந்து கொண்ட தாயார், யுவதியை சில நாட்களுக்கு உறவினர் வீட்டில் தங்க வைத்துள்ளார்.

பின்னர் இந்த யுவதி கடந்த 12 ஆம் திகதி தனது தாயாரின் வீட்டுக்கு மீண்டும் சென்றிருந்த போது சந்தேக நபர்கள் இருவரும் யுவதியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியை காண்பித்து மிரட்டி யுவதியை கடத்திச் சென்றுள்ளனர். இதனையடுத்து, கடத்திச் செல்லப்பட்ட யுவதியின் தாயார் இது தொடர்பில் தெரணியகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். (அ)

# வடக்கு, கிழக்கில் மழை

கொழும்பு, ஜன. 15

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் தெற்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டம் நிறைந்து காணப்படும்.

இடியுடன் கூடிய மழையுடன் ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்பை குறைக்க பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# தைப்பொங்கலின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்வோம்

## எதிர்க்கட்சித் தலைவர் பொங்கல் வாழ்த்து

கொழும்பு, ஜன. 15

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத்தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப் பொங்கல் விழாவின் உட்பொருளை சரியாக புரிந்துகொள்வதன் மூலம் உணரலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது தைப் பொங்கல் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

விவசாய வாழ்க்கை முறையில், ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களை செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது.

இதனை எதிர்கால சமுதாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில், பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தைப்பொங்கல் விழாவை கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர சகோதரிகளுக்கு பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்-என்றார். (அ)

# தூய்மை இலங்கை திட்டம் தொடர்பில் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க பணிப்பு

கொழும்பு, ஜன. 15

தூய்மை இலங்கை திட்டம் தொடர்பாக செயல்படுத்தப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து அமைச்சுக்களிடமிருந்தும் முன்மொழிவுகளை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

இது தொடர்பாக, ஒவ்வொரு அமைச்சகத்திலும் வெவ்வேறு குழுக்கள் நியமிக்கப்படவுள்ளதுடன் தற்போது அமைச்சுக்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்குப் பதிலாக புதிய திட்டங்கள் இந்த திட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள், தூய்மை இலங்கை திட்டம் மற்றும் ஒவ்வொரு அமைச்சகமும் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் குறித்து அமைச்சுகளில் உள்ள பணியாளர் மட்ட அதிகாரிகளுக்குச் சென்று விளக்கமளிப்பார்கள் என்று ஜனாதிபதி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ள புதிய திட்டங்கள் அடங்கிய அறிக்கைகளை அனைத்து அமைச்சகங்களும் தயாரிக்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ஒவ்வொரு அமைச்சையும் தனித்தனியாக வரவழைக்க உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (அ)

# டிஜிற்றல் அடையாள அட்டைகள் இம்மாதம் முதல் வழங்கப்படும்!

கொழும்பு, ஜன. 15

இந்த மாதம் முதல் டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக பிரதி டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், புதிதாக வழங்கப்படும் அனைத்து அடையாள அட்டைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன் அடையாள அட்டைகளைப் பெறுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டுள்ளதால், அதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும் டிஜிற்றல் அடையாள அட்டை முறையை உருவாக்குவதற்கு சுமார் 20 பில்லியன் ரூபா செலவாகும் என்பதால், அதில் பாதியை இந்தியாவின் உதவி மூலம் பெற எதிர்பார்ப்பதாகவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மதுபான விலை உயர்வால் அரசுக்குப் பெரும் இலாபம்

கொழும்பு, ஜன. 15

2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு மதுபானம் ஊடாக வரி வருமானம் 11.6 பில்லியனாக அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுபானம் மற்றும் புகையிலை பயன்பாட்டுடனான வரி அதிகரிப்பு தொடர்பான விசேட அறிவிப்பை வெளியிட்டு மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மதுபான வரிகளில் 20 வீத அதிகரிப்பு காரணமாக, மது அருந்துதல் 8.3 மில்லியன் லீற்றர்கள் வரையில் குறைந்துள்ளது.

சிகரெட்டுகள் மூலம் வரி வருமானம் 7.7 பில்லியன் அதிகரித்துள்ளதாகவும், சிகரெட் விற்பனை 521.5 மில்லியன் ரூபா வரையில் குறைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சர்வதேச இரத்தினக்கல், தங்க ஆபரண மையம் ஒன்றை அமைப்பதற்கு திட்டம்!

கொழும்பு, ஜன. 15

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை சர்வதேச அளவில் பிரபலப்படுத்தும் நோக்கில், சர்வதேச இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண மையம் ஒன்றை ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இரத்தினக்கல் அதிகார சபையின் தலைவர் நவீன் சூரியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

உத்தேச மையத்தினூடாக இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள் சிறப்பாகப் பயன் அடைவர் என்பதுடன், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை நவீன முறையில் ஆய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளும் இடம் பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று நாட்களாக பெந்தோட்டவில் இடம்பெற்ற "ஜெம் ஸ்ரீலங்கா 2025" என்ற கண்காட்சி நிறைவடைந்தது.

இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இரத்தினக்கல் அதிகார சபையின் தலைவர் நவீன் சூரியாராச்சி இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் பல முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இலங்கை இரத்தினக்கல் தொடர்பாக பல்வேறு தகவல்களைப் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சிகளுடன் கூடிய வழக்குகளை உடனடியாக விசாரித்து முடிக்குக!

## ஜனாதிபதியின் அதிரடி உத்தரவு

கொழும்பு, ஜன. 15

**இலங்கையில் சாட்சிகளுடன் கூடிய வழக்குகளை உடனடியாக விசாரித்து முடிவுக்கு கொண்டு வருமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் உயர் சட்ட அதிகாரிகள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாக ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, குற்றம் செய்யும் எந்தவொரு நபரின் நிலை என்னவாக இருந்தாலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வழக்கின் தாமதத்தை பாதிக்கும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் வழக்கு கோப்புகள் முழுமையடையாததற்கான காரணங்கள் குறித்து சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். இந்தக் கலந்துரையாடலில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, மற்றும் மூத்த அதிகாரிகள் சட்டமா அதிபருடன் கலந்து கொண்டனர். (அ)

# நீர்கொழும்பில் கஞ்சாவுடன் நேற்று இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜன. 15

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எத்துகால பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கஞ்சா போதைப்பொருளுடன் பெண் உட்பட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காத்தான்குடி பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடைய இளைஞனும் நீர்கொழும்பு கொச்சிக்கடை பிரதேசத்தில் வசிக்கும் 50 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 35 கிலோ 565 கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 15

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 45 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த வருடத்தில் மாத்திரம் 49 ஆயிரத்து 877 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டனர்.

அத்துடன் 24 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விபத்தில் சிக்கிய அம்புலன்ஸ் சாரதி வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜன. 15

வனாத்தவில்லு பிரதேச வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் ஒன்று வீதியை விட்டு விலகி மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த அம்புலன்ஸ் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

புத்தளம் - வனாத்தவில்லு வீதியில் 10ஆவது தூண் பகுதியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வனாத்தவில்லு வைத்தியசாலையில் நடைபெற்ற மருத்துவ சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து மருத்துவர் ஒருவரை அழைத்துச் சென்றுவிட்டு, மீண்டும் சிகிச்சை முடிந்து மருத்துவரை புத்தளம் வைத்தியசாலையில் விட்டு வனாத்தவில்லுவ வைத்தியசாலைக்கு திருப்பிக்கொண்டிருந்த போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் வனாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டை கொண்டு செல்லும் பொறுப்பு எம்மிடம்!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான மாற்றம் உட்பட, மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்லும் பாரிய மற்றும் பாரதூரமான பொறுப்பு எமக்கு உள்ளது.

ஒருவரை ஒருவர் மதித்தல் மற்றும் கைமாறு மறவாத உன்னத பண்புகள் என்பனவற்றைக் கொண்ட தைப் பொங்கல் பண்டிகையானது உண்மையான கலாச்சார மதிப்பீடுகளை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கின்றது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது தைப்பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-இயற்கையினூடாக எமக்கு கிடைக்கப்பெற்ற ஆசீர்வாதங்களுக்கு கைமாறு செய்வது மிகவும் உன்னதமான மனிதப் பண்பாகும்.

நாடு என்ற அடிப்படையில் நாம் விசேட மைல்கற்களை எட்டியுள்ளோம்.

கட்டமைப்பு மற்றும் கொள்கை ரீதியிலான மாற்றம் உட்பட, மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சி யுகத்தை நோக்கி நாட்டைக் கொண்டு செல்லும் பாரிய மற்றும் பாரதூரமான பொறுப்பு எமக்கு உள்ளது.


அரசாங்கம் என்ற அடிப்படையில் நாம் அந்த சவால்கள் நிறைந்த மற்றும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்து பரிணாம மாற்றத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ளோம்.

அவ்வாறான தருணங்களில் இயற்கையைப் போற்றி அதற்கு நன்றி செலுத்தும் இத்தகையதொரு அற்புதமான பண்டிகையைக் கொண்டாடுவது, மீண்டுமொரு முறை கலாச்சார ரீதியிலான செழிப்பான பிரஜைகளை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமையும்.

ஒருவரையொருவர் மதித்தல் மற்றும் மற்றவர்களின் மதம், கலாச்சார உரிமைகளை மதிக்கும் விசேட மனித பண்புகள் மற்றும் நல்லிணக்கத்தில் பூரணமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்த தைப்பொங்கல் தினத்தில் நாம் மீண்டுமொரு முறை உறுதி கொள்வோம்.

தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் மற்றும் உலக வாழ் தமிழ் சமூகத்தின் அனைத்து பிரார்த்தனைகளும் நிறைவேறும் மகிழ்ச்சிகரமான தைப்பொங்கல் தினமாக இன்றைய தினம் அமைய வேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்து கின்றேன்-என்றுள்ளது. (அ)

# மன்னாரில் தைப்பொங்கல் கொண்டாட்டம்



மன்னார்,ஜன.15

உலக வாழ் தமிழர்கள் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து மற்றும் கத்தோலிக்க மக்கள் தைப்பொங்கல் பண்டிகையை மிகவும் சிறப்பாக கொண்டாடினர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட தைப் பொங்கல் நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

மேலும் வர்த்தக நிலையங்கள், நிதி நிறுவனங்கள், அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டதோடு விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் பொங்கல் பொங்கி மக்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் மக்கள் அமைதியான முறையில் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர். (எ)

# வெள்ளவத்தையில் ரயிலில் மோதிப் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 15

கொழும்பு, வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணொருவர் ஆவார். இவர் மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையகத்தில் சிறப்பான பொங்கல்

கொழும்பு, ஜன. 15

உழவர்களின் தைத்திருநாளான தைப்பொங்கல் திருநாளினை உலகெங்கும் வாழும் இந்து மக்கள் நேற்று கொண்டாடினர்.

நாட்டு மக்களுக்கு உணவளிக்கும் உழவுத்தொழிலை நினைவு கூர்ந்து உழவு தொழிலுக்கு துணைபுரியும் இயற்கைக்கு நன்றி கூறுவதை எமது முன்னோர்கள் அனுஷ்டித்து வந்த நாளினை ... கொண்டாடி வருகிறோம்.

இதனை முன்னிட்டு நாடெங்கிலும் உள்ள இந்து ஆலயங்களில் இன்று தைபொங்கல் விசேட பூசைகள் இடம் பெற்றன.

நுவரெலியா மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சூரிய பொங்கல் மற்றும் தைப் பொங்கல் விசேட பூசைகள் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ சந்திரானந்த சர்மா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் நாட்டில் உழவு தொழில் வளம்பெற்று நாடு சிறக்க வேண்டும் நாட்டு மக்கள் பசி பஞ்சமின்றி சிறப்பாக வாழ்வதற்கு இறை அருள் கிட்ட வேண்டும் என வேண்டி பிரார்த்தனைகளும் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் கோயில் பரிபாலன சபை உட்பட பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யவும்

## தொடர்கிறது கையெழுத்துப் போராட்டம்

திருகோணமலை, ஜன.15

**தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி, வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**



இதன்படி, திருகோணமலை சிவன் கோவிலடியில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வழிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னரும், மீளவும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளை விடுதலை செய்யக் கோரியும் இந்தக் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ)

# ஆற்றில் விழுந்து குடும்பஸ்தர் பலி

சம்மாந்துறை,ஜன.15

மோட்டார் சைக்கிளில் ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசியைக் கடக்க முற்பட்ட போது நீரில் வீழ்ந்து அடித்து செல்லப்பட்டு மூழ்கிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீண்டநேர தேடுதலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பளம் வயல் உள்ளாத்து கட்டு பகுதியில் திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் தவறி விழுந்து நீரில் அடித்து செல்லப்பட்டவர் தனது மோட்டார் சைக்கிளில் மனைவி, பிள்ளையுடன் குறித்த பகுதிக்கு வருகை தந்து பின்னர் தான் மட்டும் தனியாக மோட்டார் சைக்கிளில் முன் செல்ல பின்னால் மனைவியுடன் பிள்ளையும் ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசுடன் இணைந்த பாலத்தில் பயணம் செய்தனர்.

இதன்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டதுடன் தனியாக முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற 32 வயது அப்துல் லத்தீப் இக்ராம் என்பவர் ஆற்றில் விழுந்து உயிரிழந்தார். இவர் வெளிநாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில் சில நாட்களுக்கு முன் விடுமுறையில் வீடு திரும்பியிருந்தார். இந்த நிலையில் அவர் இந்த அனர்த்தத்துக்கு முகம் கொடுத்து உயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (எ)

# 2 வயது பெண் குழந்தை கிணற்றில் வீழ்ந்து பலி!

மட்டக்களப்பு,ஜன.15

இரண்டு வயது பெண் குழந்தை ஒன்று கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்தது. இந்தச் மட்டக்களப்பு, ஏறாவூரில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் 2ஆம் பிரிவு மக்காமடி வீதியைச் சோந்த முகமட் ஷரகீர் ஜப்பிரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது

குறித்த பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் உள்ள கிணற்றுக்கு அருகில் கதிரை ஒன்று வைக்கப்பட்டிருந்த நிலையில், சம்பவதினமான நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் குறித்த குழந்தை வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த நிலையில் கிணற்றுக்கு அருகில் வைத்திருந்த கதிரையில் ஏறி கிணற்றை எட்டிப்பாத்த நிலையில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்தது.

இந்த நிலையில் மாலை 6 மணியளவில் குழந்தையை காணவில்லை என பெற்றோர் தேடிய நிலையில் கிணற்றுக்குள் குழந்தை வீழ்ந்து கிடப்பதை கண்டு குழந்தையை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தை உயிரிழந்தது என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்தது.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால் ஆறு பசுக்கள் வழங்கப்பட்டன

மட்டக்களப்பு, ஜன.15

வரலாற்று பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் சமுதாயத்தில் மிகவும் வசதி குறைந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக பசு மாடுகளை கட்டம் கட்டமாக வழங்கி வருகிறது.

குடும்பத்துக்கு ஒரு பசு வழங்கும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக மூன்றாம் கட்டமாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தலா இரண்டு பேர் வீதம் பிரதேச செயலாளர்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட ஆறு



பயனாளிகளுக்கு பசுக்கள் வழங்கும் நிகழ்வு சிறீ தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தான்தோன்றீஸ்வரர் ஆலய தலைவர் இ. மேகராசா வண்ணக்கர், செயலாளர் பொருளாளர், தேச மகா சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் நேற்று விசேட பூஜை வழிபாடுகள்



மட்டக்களப்பு,ஜன.15

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் தைப் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி சிறீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

காலை சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆலய முன்றலில் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு விசேட பூஜைகள் நடைபெற்றன.

ஆலயத்தின் வண்ணக்கமார்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் பொங்கல் படைக்கப்பட்டு ஆலய பிரதமகுரு சிவசிறீ பூரண சுதாகரன் குருக்கள் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டியும் விவசாயிகள் சிறந்த விளைச்சலைபெறவேண்டியும் மாமாங்கேஸ்வரருக்கு பூஜைகளும் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன.

இதேவேளை, தைத்திருநாள் விசேட பொங்கல் பூஜையில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டதுடன் பொங்கல் வாழ்த்துகளையும் தங்களுக்குள் தெரிவித்துக் கொண்டனர். (எ)

# பழுதடைந்த வாகனங்களை பார்வையிட்டார் ஆளுநர்



மட்டக்களப்பு,ஜன.15

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் பழுதடைந்த வாகனங்களை பார்வையிட்டார்.

இதன்போது, பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய வாகனங்களை விரைவாக பழுதுபார்த்து பயன்படுத்த ஆளுநர் அறிவுறுத்தினார். (எ)

# யானை உயிரிழப்பு

திருகோணமலை, ஜன.15

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தனவெட்டை காட்டுப் பகுதியிலுள்ள சிறிய பள்ளமொன்றில் யானையின் சடலம் மீட்கப்பட்டது.

இந்த யானையானது இரண்டு தினங்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. குறித்த யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 விவசாயிகள் சுட்டுக்கொலை

## நைஜீரியாவில் ஆயுதக்கும்பல் அட்டூழியம்

அபுஜா, ஜன.15

**நைஜீரியாவில் ஆயுதமேந்திய கும்பல்களால் 40 விவசாயிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் வடகிழக்கு பகுதியில் ஆயுதமேந்திய கும்பல்கள் செயல்பட்டு வருகின்றன. பழமைவாதிகளான இவர்கள் மேற்கத்திய கலாசார தழுவலை கடுமையாக எதிர்த்து வருகிறார்கள். விவசாயத்தில் நவீனமயமாதலை கொண்டு செயல்பட்டு வரும் விவசாயிகள் வசிக்கும் கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வருவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு போர்னோ மாகாணத்தின் மோகுன்னே கிராமத்துக்குள் நள்ளிரவுவேளை ஆயுதமேந்திய கும்பல் ஒன்று புகுந்து அங்குள்ள விவசாயிகளை சரமாரியாக சுட்டுவிட்டு தப்பினர். இந்தக் கோர சம்பவத்தில் 40 விவசாயிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். (எ)

# வடகொரிய படையினர் 300 பேர் இதுவரை பலி!

சியோல், ஜன.15

உக்ரைனுக்கு எதிரான போரில் 300 வடகொரிய படையினர் பலியாகினர். 2,700 பேர் காயமடைந்தனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது. தென்கொரியா பாராளுமன்ற உறுப்பினர் லீ சியாங் - வீ அன், தேசிய புலனாய்வுத் துறையின் (என். ஐ. எஸ்.) அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், "ரஷ்யாவுக்கு ஆதரவாக குவிக்கப்பட்ட வடகொரிய படையினர் குர்ஸ்க் பகுதி வரை நீடிக்கப்பட்டுள்ளனர்.

என். ஐ. எஸ். துறையின் ஆய்வின்படி, நவீன போர் கருவிகள் பற்றிய புரிதல் வடகொரிய படையினர்களுக்கு இல்லை. போதியளவுக்கு புரிந்து கொள்ளும் தன்மை இல்லாத அவர்களை ரஷ்யா பயன்படுத்தி கொள்கிறது. அந்த வகையில், படையினர் இடையே அதிகளவில் காயங்களும், மரணங்களும் ஏற்படுகின்றன- என்றார்.

ஏற்கனவே, 2 வடகொரிய படையினரை உக்ரைன் சிறைபிடித்துள்ளது. நாங்கள் அவர்களை விடுவிக்கத் தயாராக இருக்கிறோம் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறினார். எனினும், அவர்கள் இருவருக்குப் பதிலாக, உக்ரைன் கைதிகளை விடுவிக்க வேண்டும்" என்றும் அவர் நிபந்தனை விதித்துள்ளார். (எ)

# அமெரிக்காவில் காட்டுத்தீ இதுவரை 24 பேர் உயிரிழப்பு

## வரலாற்றில் மிகப்பெரிய பேரழிவு!

வாஷிங்டன், ஜன.15

அமெரிக்காவில் காட்டுத்தீயில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்தது.

இதுவரை 15 சதவீதம் தீ மட்டுமே கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த 7ஆம் திகதி பயங்கர காட்டுத்தீ ஏற்பட்டது. இந்த காட்டுத்தீ மளமளவென அங்கிருந்த மற்ற பகுதிகளுக்கும் பரவி வருகிறது. இதனால், சுமார் 36 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி இதுவரை எரிந்து நாசமாகின. மேலும் ஹொலிவுட் பிரபலங்கள் உட்பட சுமார் 12 ஆயிரம் பேரின் வீடுகள் தீக்கிரையாகின.

காட்டுத்தீயை அணைக்கும் பணியில் நூற்றுக்கணக்கான விமானங்கள், ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கலிபோர்னியா ஆளுநர் கேவின் நியூசம் கூறுகையில், அமெரிக்க வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய இயற்கை பேரழிவு.

இந்த பேரழிவு ஆயிரக்கணக்கான வீடுகளை அழித்துவிட்டது- என்றார். (எ)

# ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை

ரோக்கியோ, ஜன.15

ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது.

ஜப்பானின் தெற்கே கியூஷூ பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6. 8 ஆக பதிவாகினது. இந்த நிலநடுக்கம் 37 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது. இதனைத்தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது. (எ)

# பாகிஸ்தானில் சுரங்க விபத்தில் பலி எண்ணிக்கை 11ஆக உயர்வு

பலூசிஸ்தான், ஜன.15


பாகிஸ்தானில் சுரங்க விபத்தில் ஏற்பட்ட வாயுவெடிப்பில் சிக்கி பலியான தொழிலாளர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்தது.

குவெட்டா நகரில் சஞ்ஜிதி பகுதியருகே நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ளது. இந்த நிலையில், நிலக்கரி சுரங்கத்தில் கடந்த 9ஆம் திகதி திடீரென வாயுவெடிப்பு ஏற்பட்டது. இதில் சுரங்கத்தின் ஆழத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள் பலர் வெளியே வரமுடியாமல் சிக்கி தவித்தனர்.

அவர்களை மீட்க மாகாண பேரிடர் மேலாண் கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தொடர்ந்து 6 நாட்களாக மீட்புப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இதில், முதலில் 4 பேரின் உடல்களை மீட்பு குழு மீட்டது. 3 ஆயிரம் அடி ஆழத்தில் அவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

அவர்கள் தவிர, 8 பேர் சுரங்கத்துக்குள் சிக்கியிருந்தனர். அவர்கள் 4,300 அடி ஆழத்தில் இருக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், தொடர்ந்து நடந்த மீட்புப் பணியின் ஒரு பகுதியாக, மீதமுள்ளவர்களில் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. இதனால், சுரங்க விபத்தில் பலி எண்ணிக்கை 11 ஆக அதிகரித்தது. (எ)

# பிரேசிலில் நிலச்சரிவு 10 பேர் உயிரிழந்தனர்



பிரேசிலியா, ஜன.15

பிரேசிலில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 10 பேர் பலியாகினர்.

பிரேசில் நாட்டின் தென்கிழக்கில் மினாஸ் கெராய்ஸ் மாகாணத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இபாதிங்கா நகரில் கடந்த சனிக்கிழமை இரவு ஒரு மணி நேரத்தில் 80 மில்லி மீற்றர் அளவுக்கு கனமழை பெய்தது.

இதில், அந்த பகுதியில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில், வீடுகள் சேதமடைந்தன. நிலச்சரிவில் சிக்கி 8 வயது சிறுவன் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். இதுதவிர, அருகேயுள்ள சான்டனாடோ பரெய்சோ நகரில் இருந்து சடலம் ஒன்றும் மீட்கப்பட்டது.

இதனால், பிரேசிலில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் வரை பலியாகினர்.

இதேபோன்று, அருகேயுள்ள பெத்தனியா நகரின் மலைப்பாங்கான பகுதியின் ஓரத்தில் வீதி ஒன்றில் இருந்த அனைத்தும் நிலச்சரிவில் அடித்து செல்லப்பட்டன. (எ)

# இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்படுமா?

## சமாதான பேச்சுகளில் முன்னேற்றம்

கெய்ரோ,ஜன.15

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம், பணயக் கைதிகள் விடுதலை தொடர்பான பேச்சுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்திய இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, வரும் நாட்கள் மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

இந்த ஒப்பந்தத்தை நிச்சயமாக ஏற்க வேண்டும் என ஹமாஸ் அமைப்புக்கு கட்டாரின் மத்தியஸ்தர்கள் அழுத்தம் கொடுத்தனர். அதேபோன்று, அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்பின் தூதுவர் ஸ்டீவ் விட்காப், இஸ்ரேல் தரப்புக்கு அழுத்தம் கொடுத்து வந்தார் என்று பேச்சுவார்த்தையை நன்கு அறிந்த ஒருவர் கூறியிருக்கிறார்.

மத்தியஸ்தர்கள் வரைவு ஒப்பந்தத்தை இரு தரப்பினருக்கும் வழங்கியதாகவும் அந்த நபர் கூறினார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பில் பங்கேற்ற பேச்சுவார்த்தையாளர்கள் இப்போது வரைவு ஒப்பந்தத்தை இறுதி ஒப்புதலுக்காக தங்கள் தலைவர்களுக்கு அனுப்புவார்கள். தலைமையின் முடிவைப் பொருத்து அடுத்தகட்ட நகர்வு இருக்கும்.

இந்த முறையாவது ஒப்பந்தம் ஏற்படுமா? என பலஸ்தீனியர்களும் பணயக்கைதிகளின் குடும்பத்தினரும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் காஸாவின் பெரும்பாலான பகுதிகள் அழிந்துவிட்டன. மொத்த முள்ள 2. 3 மில்லியன் மக்களில் 90 சதவீதம் பேர் இடம்பெயர்ந் துள்ளனர். (எ)

# சுரங்க விபத்தில் சிக்கிய 100 தொழிலாளர்கள் பலி

கேப்டவுன்,ஜன.15

தென்னாபிரிக்காவில் சுரங்க விபத்தில் சிக்கிய தொழிலாளர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்தது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் சட்ட விரோத சுரங்கத் தொழிலாளர்கள் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தென்னாபிரிக்காவில் கைவிடப்பட்ட தங்கச் சுரங்கத்தில் தோண்டிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் குழு ஒன்று இந்த விபத்தில் சிக்கியது.

அவர்கள் பல நாட்களாக சுரங்கத்தில் சிக்கிக் கொண்டதாகவும், பட்டினி மற்றும் நீரிழப்பு காரணமாக இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சுரங்கத்தில் சிக்கிய பல தொழிலாளர்கள் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி


## இரண்டாவது போட்டியிலும் இங்கிலாந்து தோல்வி

மெல்பேர்ன்,ஜன.15

மகளிர் ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 180 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்த நிலையில் இலகுவான வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியால் வெறும் 159 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால், 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அசத்தல் வெற்றி பெற்றது.

அத்தோடு, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரை இப்போதே கைப்பற்றி விட்டது. (எ)



# இந்தியா - அயர்லாந்து கடைசி போட்டி இன்று



ராஜ்கோட், ஜன.15

கடைசி போட்டியில் இந்தியா - அயர்லாந்து அணிகள் இன்று மோதுகின்றன.

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 6 விக்கெட்கள் வித்தியாசத்திலும், 2ஆவது ஆட்டத்தில் 116 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்திய அணி எளிதில் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது.

இந்த நிலையில் இரு அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள மைதானத்தில் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரை முழுமையாக கைப்பற்றும் முனைப்புடன் இந்தியா களமிறங்கும். அதேசமயம் இந்தியாவுக்கு எதிராக முதல் வெற்றியை பெற அயர்லாந்து அணி போராடும். இதனால், இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. இலங்கை நேரப்படி இன்று முற்பகல் 11 மணிக்கு போட்டி தொடங்குகிறது. (எ)

# போராடி வெற்றி பெற்ற நோவக் ஜோகோவிச்



மெல்பேர்ன், ஜன.15

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்று போட்டியில் போராடி வெற்றி பெற்றார் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் நம்பர் 1 வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா), நிஷேஷ் பசவரெட்டியுடன் (அமெரிக்கா) பலப்பரீட்சை நடத்தினார்.

இதில் முதல் செட்டை பசவரெட்டி கைப்பற்றி ஜோகோவிச்சுக்கு அதிர்ச்சி கொடுத்தார். பின்னர் சுதாரித்து விளையாடிய ஜோகோவிச் அடுத்த 3 செட்களை கைப்பற்றி வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 4-6, 6-3, 6-4 மற்றும் 6-2 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குள் நுழைந்துள்ளார். (எ)

# ஆஸி ஓபன் ரென்னிஸ் ஜெசிகா ஆபார ஆட்டம்

மெல்பேர்ன், ஜன.15


அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தத் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, அவுஸ்திரேலியாவின் மாயா ஜாயிண்ட் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே அபாரமாக ஆடிய ஜெசிகா பெகுலா 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் மாயா ஜாயிண்டை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



# ஜன்னிக் சினெர் வெற்றி



மெல்பேர்ன், ஜன.15

ஆஸி ஓபன் ரென்னிஸ் தொடரில் முதல் சுற்று போட்டியில் ஜன்னிக் சினெர் வெற்றி பெற்றுள்ளார்.

ஆண்டின் முதலாவது "கிராண்ட்ஸ்லாம்" போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் நம்பர் 1 வீரரும், நடப்பு சம்பியனுமான ஜன்னிக் சினெர் (இத்தாலி), தரவரிசையில் 34ஆவது இடத்தில் இருக்கும் சிலி வீரர் நிகோலஸ் ஜாரியுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சினெர் 7-6, 7-6 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)

# தென்னாபிரிக்க அணியில் மீண்டும் நோர்க்கியா, நிகிடி

கேப்டவுன்,ஜன.15

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் பெப்ரவரி 19ஆம் திகதி பாகிஸ்தானில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் பங்கேற்கும் தெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பெருவிரல் காயத்தில் இருந்து குணமடைந்துள்ள வேகப்பந்து வீச்சாளரான அன்ரிச் நோர்க்கியா, இடுப்பு பகுதியில் ஏற்பட்ட காயத்தில் இருந்து மீண்டுள்ள லுங்கி நிகிடி ஆகியோர் அணிக்குத் திரும்பியுள்ளனர்.அதேவேளை, ஜெரால்ட் கோட்ஸி, நந்த்ரே பர்கர் ஆகியோர் காயம் காரணமாக அணியில் இடம்பெற வில்லை.



தென்னாப்பிரிக்க அணி விவரம், தெம்பா பவுமா (தலைவர்), ரியான் ரிக்கெல்டன், டோனி டி சோர்சி, எய்டன் மார்க்ரம், ராஸி வான் டெர் டஸ்சென், டேவிட் மில்லர், டிரிஸ்டன் ஸ்டப்ஸ், ஹென்ரிச் கிளாசென், வியான் முல்டர், மார்க்கோ ஜான்சன், கேசவ் மகராஜ், தப்ரைஸ் ஷம்சி, லுங்கி நிகிடி, அன்ரிச் நோர்க்கியா, ககிசோ ரபாடா ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (எ)

# 2ஆவது சுற்றில் அல்காரஸ்



மெல்பேர்ன், ஜன.15

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார் கார்லஸ் அல்காரஸ்.

"கிராண்ட்ஸ்லாம்" அந்தஸ்து கொண்ட அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ், கஜகஸ்தானின் அலெக்சாண்டர் ஷெவ்சென்கோவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய அல்காரஸ் 6-1, 7-5, 6-1 என்ற செட் கணக்கில் அலெக்சாண்டர் ஷெவ்சென்கோவை வீழ்த்தி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# ஐ.பி.எல். போட்டிகள் மார்ச் 23இல் ஆரம்பம்

மும்பை, ஜன.15

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி எதிர்வரும் மார்ச் 23ஆம் திகதி தொடங்கும் என்று பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடருக்கான மெகா ஏலம் கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து 2025இல் நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணையைத் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையில், மும்பையில் ராஜீவ் சுக்லா கூறுகையில்,

இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடக்கப் போட்டி மார்ச் 23ஆம் திகதி நடைபெறும். மேலும், தொடரின் இறுதிப்போட்டி மே 25இல் நடைபெறும்- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்...

கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (அ)

## தமிழரசு...

வழக்கு, மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடத்தப்படவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதுடன் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

## அரசியல்...

வைக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்கள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தயாராகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாகவும், சில வருடங்களாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுக்கும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொதுமக்களிடத்தில் கையெழுத்துக்களைச் சேகரித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடமும், சட்டமா அதிபரிடமும் கையளிக்கும் முகமாக போராளிகள் நலன் புரிச்சங்கத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் கையெழுத்துப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது என்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள எந்தவொரு சிறைகளிலும் அரசியல் கைதிகள் என்றொருவரும் இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உள்ளார்கள்.

இவர்களில் சிலருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. சிலரது வழக்குகள் நீண்ட காலமாகவும், குறுகிய காலமாகவும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், நாடாளவிய ரீதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியலை விரைவாக தயாரிக்கும் நடவடிக்கை என்னால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகளைச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்று முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றேன்.

அரசாங்கத்தினைப் பொறுத்தவரை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக இன,மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நியாயமாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதையே இலக்காக கொண்டிருக்கின்றது.

அதேநேரம், குறித்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்கள் குறித்து எம்மால் எந்தவிதமான நடவடிக்கைகளையும் செய்ய முடியாது. ஏனென்றால் நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. எனினும் அவர்களின் விவரங்களையும் பெற்றுக்கொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் - என்றார். (அ)

## ஜனநாயக...

ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ் தேசிய கட்சி உட்பட 7 பங்காளிக் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியாக செயற்பட்டு வருகின்றது.

தற்போது, அதன் தலைமைத்துவம், இணைத் தலைமைகளாக, ஒவ்வொரு கட்சியின் தலைவர்களை உள்ளடக்கி கட்டமைக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த வாரம் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டணியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின்போது, ஒற்றைத் தலைமையின் கீழ் தமிழ் தேசியக் கூட்டணியை செயற்பட வைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள மத்திய செயற்குழு கூட்டத்தில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கநாதனை தலைவராக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## வன்னியில்...

மேற்கொண்டிருந்தன. யுனெஸ்கோவின் டிஜிற் றல் அறிவு பூகோளச் சட்டகத்துக்கு அமைவாக இந்த ஆய்வினை மேற்கொள்ளவதற்கான தொழில்நுட்ப பங்காளிகளாக நேபாளத்தின் ASER, Gali Gali மற்றும் Karkhana Global ஆகிய ஆகிய நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

இந்த ஆய்வுக்கான தகவல் திரட்டும் பணி 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் அதன் முழுமையான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் பெறுபேறுகள் பிரகாரம் கையடக்கதொலைபேசி எல்லோருக்கும் பொதுவாக கிடைக்கும் சாதனமாக இருக்கிறது. 92.3 சதவீதமானோரின் வீடுகளில் குறைந்தது ஒரு கையடக்க தொலைபேசியாவது உள்ளது. மன்னாரில் 98.85 வீதமானோர் கையடக்கத் தொலைபேசியை வைத்திருக்கின்றனர். இது ஏனைய ஏனைய இரண்டு மாவட்டங்களையும் விட அதிகமாகும். அதிகளவான கையடக்கத்தொலைபேசி பாவனை காரணமாக மூன்று மாவட்டங்களிலும் அனேகமானவர்களுக்கு இணையத்தை பெற்றுக்கொள்ள முடிகின்றது. மன்னாரில் 90.48 சதவீதமானோரும், வவுனியாவில் 85.86 சதவீதமானோரும், முல்லைத்தீவில் 85.41 சதவீதமானோரும் இணையத்தை பயன்படுத்துகின்றனர். ஆனால் இணையத்துக்காக பிரோட்பாண்ட் கருவியை பயன்படுத்துவோர் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர் - என்று தெரிய வந்துள்ளது. (அ)

## சீனா...

பயணத்தின்போது பாதையின் இரு புறமும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இது பரஸ்பர மரியாதை மற்றும் இராஜதந்திரத்தை அடையாளப்படுத்துகிறது.

இந்த அரசு முறைப் பயணத்தின் போது, தொழில்நுட்பம், விவசாய மேம்பாட்டில் கவனம் செலுத்தும் களப் பயணங்கள் மற்றும் வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள் உட்பட பல முக்கிய ஈடுபாடுகளில் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார்.

இந்த விஜயத்தில் உயர் மட்ட வணிகக் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்த விஜயத்தின் போது கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி திஸாநாயக்கவுடன் அமைச்சர்களான விஜித ஹேரத், பிமல் ரத்நாயக்க உள்ளிட்டவர்களும் சீனா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோலாகல பட்டத் திருவிழா



யாழ்ப்பாணம், ஜன.15

வல்லை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும், வல்லை உதயசூரியன் கழகமும் இணைந்து நடத்திய வல்வெட்டித்துறையின் மாபெரும் வினோத விசித்திர சர்வதேச பட்டப்போட்டி உதய சூரியன் உல்லாசக் கடற்கரையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பல வகையான பட்டங்கள் மழைக்கு மத்தியிலும் போட்டியில் பங்கேற்றன. வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு ஆளுநர் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். அத்துடன் இந்த நிகழ்வில் கல்விச் சாதனையாளர்களையும் ஆளுநர் கௌரவித்தார்.

இங்கு பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர், யாழ். மாவட்டச் செயலராக 2018ஆம் ஆண்டு இருந்தபோது இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதை நினைவுகூர்ந்ததுடன் இந்த நிகழ்வு தொடர்ச்சியாக சிறப்பாக இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டார். எமது மண்ணின் பெருமைகளை பறைசாற்றும் வகையில் இந்தப் போட்டிகள் அமைந்துள்ளதாகத் தெரிவித்த ஆளுநர், இது பாராட்டப்படவேண்டிய விடயம் எனவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொருவரதும் தனித்துவமான திறமைகளை வெளிக்கொணர்வதற்கான சந்தர்ப்பமாக இந்தப் பட்டப்போட்டி அமைந்துள்ளதுடன், ஒவ்வோர் ஆண்டும் புதிது புதிதாக சிந்தித்து பட்டங்களை உருவாக்குவது சிறப்பானது என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், வல்வெட்டித்துறை நகர சபையின் செயலர் கிசோக்குமார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## 13இல் கைவைக்க...

சந்திரசேகர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த அவர் தமிழகத் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக நாங்கள் என்ன கருதுகின்றோம் என்பதை விடவும் தமிழ் மக்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

தமிழ் மக்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தினை தமக்கு கிடைத்த உரிமையாக கருதுகின்றார்கள் என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்துள்ளது.

அதனடிப்படையில் தான் நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனை உள்ளீர்த்திருந்தோம்.

அதுமட்டுமன்றி, 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பிலும் காணப்படுகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவுள்ளதோடு அதனையடுத்து இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுக்கும் விடயமாக 13ஆவது திருத்தச்சட்டத்தினையும், மாகாண சபை முறைமையும் கருதுகின்றபோது அதனை அர்த்தபுஷ்டியான நிருவாகக் கட்டமைப்பாக செயற்படுத்திப் பார்ப்பதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஆகவே 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் எமது நிலைப்பாட்டை விடவும் தமிழ் மக்களின் நிலைப்பாடே முக்கியமானது. அதேநேரம், தோழர் அநுரகுமார தலைமையிலான அரசாங்கமானது அனைத்து மக்களின் ஆணையுடனேயே ஆட்சிப்பொறுப்பினைப் பெற்றுள்ளது.

இதனால், அது அனைத்து மக்களுக்கான அரசாங்கமாகச் செயற்படவுள்ளதோடு, மக்கள் நலன்களுக்கே முக்கியத்துவம் அளிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றார்.(அ)

## அரசு...

கொண்டமையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் வளங்களை பயன்படுத்தி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் அரசாங்கம் பயணகிக்க வேண்டும். அதனையே சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முன்னெடுக்கின்றன.

அந்த விடயங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் பயணிக்கவேண்டிய பாதை உள்ளது.அரசங்கம் பயணிக்கும் பாதை சுமூகமானதாக அமைந்துள்ளது. உள்ளது. ஆனாலும் அவர்கள் அந்த பாதையில் உரியவாறு பயணிக்காவிடின் அதன் பிரதிபலன் கடினமானதாக அமைந்துவிடும்.

நாட்டை வீழ்ச்சி காண்பதற்கு மீண்டும் இடமளிக்க முடியாது. சரியான விடயங்களை மேற்கொள்வதன் ஊடாக மாத்திரமே அரசாங்கத்தால் சரியான பாதையில் பயணிக்க முடியும்-என்றார். (அ)

## சீன...

பிங்கை சீன மக்கள் மண்டபத்தில் சந்திக்கிறார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சீன ஜனாதிபதிக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படுமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரசை எவ்வாறு நிர்வகிப்பதென தடுமாற்றம் அடைந்துள்ளது அரசு

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 25

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நிவாரண பாதீடா அல்லது பொருளாதார மேம்பாட்டுக்கான பாதீடா என்பதை அரசாங்கம் வெளிப்படையுடன் மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அரசாங்கத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதில் அரசாங்கம் தடுமாற்றமடைந்துள்ளது. இயலாவிடின் நாட்டுக்காக தெரிந்தவர்களிடம் ஆலோசனை பெற வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு குறுகிய கால அடிப்படையில் அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ள நிலையில் எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பது சந்தேகத்துக்குரியது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து 12 வர்த்தமானிகளை வெளியிட்டு பின்னர் அவற்றை மீளப் பெற்றார்.

இறுதியாக 13 ஆவது தடவையாக வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்து சிவப்பு அரிசியின் விலை 210 ரூபா, நாடு அரிசியின் விலை 220 ரூபா, சம்பா அரிசிக்கு 230 ரூபா என்ற அடிப்படையில் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் ஒருசில பகுதிகளில் அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறது. அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக குறுகிய கால அடிப்படையில் அரிசி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நீண்ட கால தீர்வு ஏதும் முன்வைக்கப்படவில்லை. அரிசி இறக்குமதிக்கான தடைகள் நீக்கப்படும் போது நடுத்தர அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அரிசி தட்டுப்பாட்டுக்கு ஜனாதிபதி அநுரகுமார பொறுப்புக் கூற வேண்டும் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. வர்த்தமானி வெளியிட்டோ அல்லது இராணுவத்தை கொண்டோ அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண முடியாது.

தற்போதைய அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு சக்தி அரிசி கூட்டுறவு திட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். இருப்பினும் இது வரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இந்த திட்டத்துக்கு நாங்கள் வைத்த சக்தி அரிசி கூட்டுறவு திட்டம் என்ற பெயர் அரசாங்கத்துக்கு பிரச்னை என்றால் தாராளமாக பெயரை மாற்றிக் கொண்டு இத்திட்டத்தை அமுல்படுத்தலாம். கூட்டுறவு திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டால் மாத்திரமே நடுத்தர மக்களுக்கு நிவாரணமளிக்க முடியும். அதனால் பொருளாதாரத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது - என்றார். (அ)

# சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட ஊதுபத்தி பெட்டிகள் மீட்பு!

கொழும்பு, ஜன. 15

புறக்கோட்டை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த ஊதுபத்திப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது குறித்த ஊதுபத்தி பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

அந்த பெட்டிகளை இறக்குமதி செய்தவரின் தகவல்கள் குறிப்பிடப்படாததன் காரணமாக அந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, உள்நாட்டு உற்பத்தியாளரின் எந்தவித தகவல்களும் உள்ளடங்காத ஒரு தொகுதி ஊதுபத்தி பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# வெள்ளத்தினால் சேதமடைந்த பயிர்களுக்கு இம்மாதம் இழப்பீடு

கொழும்பு, ஜன. 15

கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு இந்த மாத இறுதியில் வழங்கப்படும் என்று கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபை தெரிவித்துள்ளது.

பயிர் சேத மதிப்பீடுகளில் சுமார் 95 சதவீதம் தற்போது நிறைவடைந்துள்ளதாக அதன் தலைவர் பேமசிறி ஜாசிங்கராச்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் பயிர்ச் சேத மதிப்பீடுகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதெனவும் விவசாயிகள் அபிவிருத்தி மத்திய நிலையங்களினால் பரிந்துரைக்கப்பட்ட இறுதி இழப்பீட்டு ஆவணங்கள் பெறப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுமென்றும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பீட்டுச் சபைத் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைவதற்கு நாம் தயார்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது




கொழும்பு, ஜன. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த அழைப்பு உள்ளிட்ட இதர அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைவது குறித்தான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த இரு பிரதான தேசியத் தேர்தல்களின் அடைவு மட்டத்தை கருத்திற்கொண்டு இந்த கலந்துரை யாடல்களை மேற்கொள்வது சிறந்தது என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் ஐக்கிய மக்கள் சக்திக்கு, ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள திறந்த அழைப்பு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமல்ல இதர அனைத்து அரசியல் கட்சிகளுடன் ஒன்றிணைவது குறித்து கலந்துரையாட நாம் எதிர்பார்த்துள்ளோம்.

குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

எனவே இவ்விரு கட்சிகளிலும் உள்ளவர்கள் தங்களது தற்போதைய அரசியல் நிலைமை என்ன என்பது தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். எதேச்சதிகாரமாக செயற்படாமல் அனைவரையும் ஒன்றிணையுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம் - என்றார். (அ)

# மின்சாரக் கட்டணத்தை 20 - 30 வீதத்துக்கு இடைப்பட்ட அளவில் குறைக்க யோசனை!

கொழும்பு, ஜன. 15

மின்சாரக் கட்டணம் 20 முதல் 30 சதவீதத்துக்கு இடைப்பட்ட அளவில் குறைக்கப்பட வேண்டும் என மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பொதுமக்களின் கருத்தறியும் நடவடிக்கையின் போது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த டிசெம்பர் 27ஆம் திகதி முதல் கடந்த 10ஆம் திகதிவரை மாகாண மட்டத்தில் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் யோசனை பெறும் செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது.

இதன்போது அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்பினர், வலுசக்தி துறையுடன் தொடர்புடையவர்கள் என 400 இற்கும் மேற்பட்டோர் தங்களது யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் அமுல்படுத்தப்பட வேண்டிய மின்கட்டணம் தொடர்பான தங்களது நிலைப்பாட்டைக் கடந்த டிசம்பர் மாதம் 6ஆம் திகதி இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

அதற்கமைய, இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் மின்கட்டணத்தில் எந்தவித திருத்தத்தையும் மேற்கொள்ள முடியாது என இலங்கை மின்சார சபை தமது யோசனையை முன்வைத்திருந்தது.

எவ்வாறாயினும், கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு முன்வைத்த யோசனையில், மின் உற்பத்தி மற்றும் விநியோகத்துக்காக தற்போது ஏற்பட்டுள்ள தேவையற்ற செலவுகளைக் குறைப்பதன் ஊடாக மின்கட்டணத்தை 11 வீதத்துக்கும் 20 வீதத்துக்கும் இடைப்பட்ட அளவில் குறைக்க முடியும் என சுட்டிக்காட்டியிருந்தது.

அத்துடன், எரிபொருள் கொள்வனவின்போது, நியாயமான செலவுகளின் அடிப்படையில் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் 28 பில்லியன் ரூபாய் வரை சேமிக்க முடியும் எனவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது.

அதற்கமைய, 22 வீதத்தினால் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தமது அடிப்படை பரிந்துரைகளை முன் வைத்திருந்தது.

இந்தநிலையில், தற்போது பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ள நிலையில், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானம் இந்த வாரத்தினுள் அறிவிக்கப்படும் என அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆகாயப் போக்குவரது சேவையை வழங்கியதால் ரூ.56 மில்லியன் வருமானம்

கொழும்பு, ஜன. 15

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆகாயவழிப் போக்குவரத்து சேவைகளை வழங்கியதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு 56 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக வருமானம் ஈட்டப்பட்டதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவல்களுக்கு அமைவாக ஆங்கில ஊடகமொன்று இவ்விடயத்தை வெளிப்படுத்தியுள்ளது.

2024 ஓகஸ்ட் 15 அன்று வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 2024 செப்ரெம்பர் 18 அன்று தேர்தல் பிரசாரங்கள் நிறைவடையும் வரையில் இலங்கை விமானப்படையினால் 34 நாட்கள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான ஆகாயவழிப் போக்குவரத்துக்கான சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 23தடவைகள் போக்குவரத்து சேவையைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு அதற்காக 29.09 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் 11 தடவைகள் சேவை பெறப்பட்டுள்ளதோடு அதற்காக 20.75 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது,

நமல் ராஜபக்ஷ இரண்டு தடவைகள் சேவையைப் பெற்றுள்ளதோடு 1.44 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு சேவையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 2.68 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

அதே நேரத்தில் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஒரு சேவையைப் பெற்றுக்கொண்டதோடு அதற்காக 1.24 மில்லியன் ரூபாவையும் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஒரு சேவையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 1.6 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார்.

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் அதன் தலைவருமான தற்போதைய ஜனாதிபதி அநுர குமார பிரசாரத்தின் போது ஆகாயவழிப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்தவில்லை.

இதேநேரம், தேர்தல் காலத்தில் ஆகாயவழிப் போக்குவரத்துக்காக 42,000 லிற்றர் எரிபொருள் தேவைப்பட்டதாகவும் அதற்காக 9 மில்லியன் ரூபா செலவாகியதாகவும் இலங்கை விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.